தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Tamilmanam International Research Journal of Tamil Studies
*An Internationally Peer-Reviewed, Open Access Monthly Journal*
*eISSN: 3049-0723*
*Vol. 1 Issue: 10 July 2025*

# திருக்குறளில் அறநெறிச் சிந்தனைகள்

## THIRUKKURALIL ARANERI SINTHANAIGAL

**வெ. தனலட்சுமி, முனைவர். கோ. கிருஷ்ணன்**,**

ஆராய்ச்சியாளர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை - 600078, தமிழ்நாடு, இந்தியா.

EMAIL ID: devidhanam176@gmail.com, PHONE NO: 9042073176 ORCID: https://orcid.org/0009-0006-7095-483X

**நெறியாளர், பேராசிரியர், தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல், மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், நிகர்நிலைப் பல்கலைக்கழகம், சென்னை - 600078, தமிழ்நாடு, இந்தியா.

**V. DHANALAKSHMI, DR. G. KRISHNAN****

*RESEARCH SCHOLAR, DEPARTMENT OF TAMIL, FACULTY OF HUMANITIES AND SCIENCE, MEENAKSHI ACADEMY OF HIGHER EDUCATION AND RESEARCH, (DEEMED TO BE UNIVERSITY), CHENNAI – 600078, TAMILNADU, INDIA.*

***RESEARCH GUIDE, PROFESSOR, DEPARTMENT OF TAMIL, HUMANITIES AND SCIENCE, MEENAKSHI ACADEMY OF HIGHER EDUCATION AND RESEARCH (DEEMED TO BE UNIVERSITY), CHENNAI – 600078, TAMILNADU, INDIA.*

**Abstract:**

Tamil literature is one of the world's most ancient and finest literatures. It is one of the world's greatest literatures, with a continuous tradition spanning over two thousand years. Tamil literary works expound on various aspects of life. Tamil literature encompasses many forms such as Venpa (a poetic meter), Tirukkural, Pudukkavithai (modern poetry), essays, proverbs, and ninety-six types of minor literary works (Sitrilakkiyangal). Our ancestors have categorized Sangam literature into Ettuthogai (Eight Anthologies), Pathuppattu (Ten Idylls), and Pathinenkilkanakku (Eighteen Minor Works). Among these, Tirukkural is the foremost and most important ethical text. This work is defined as a moral literary text. It is also known as 'Ulaga Podumarai' (Universal Veda) and 'Tamil Marai' (Tamil Veda). Bharathi praised this book, written by the revered Tamil poet Thiruvalluvar, saying: "Tamil Nadu, with its heavenly fame, Gave Valluvan to the world."

Madurai Thamizh Naganar, who understood the greatness of Tirukkural, declared: "All things are contained within it; There is nothing not contained within it." This statement highlights the profound essence of Tirukkural, transcending time and boundaries. The greatness of Tirukkural has been praised by 57 poets in the work "Thiruvalluva Maalai." Regarding the greatness of Tirukkural, Avvaiyar says: "Kural, which split an atom, poured seven seas into it, And then compressed it."

This book stands out as a preeminent work among all books in the world, notably for its exclusion of concepts like caste, religion, and race. Tirukkural also excels in showcasing the antiquity of Tamil and its principles of life.

Although this book points out life ethics such as moral discipline, domestic discipline, social discipline, and individual discipline, this research paper aims to analyze the multifaceted ethical thoughts that amaze the world, such as the ethics of love (Anbaram), the ethics of giving (Eethalaram), the ethics of domestic life (Illaram), and the ethics of hospitality (Virundhombal Aram).

**Keywords**: *அன்பு அறம்*: Benevolence / Virtue of Love, *ஈகை அறம்*: Generosity / Virtue of Generosity, *இல்வாழ்க்கை அறம்*: Virtuous Domestic Life / Ethics of Family Life, *விருந்தோம்பல் அறம்*: Hospitality / Virtue of Hospitality, *ஒழுக்கமுடைமை*: Moral Conduct / Discipline / Uprightness, *கொல்லாமை*: Non-violence / Non-killing, *நடுவுநிலைமை*: Impartiality / Fairness / Equity

**நல்லொழுக்க விழுமியம்:-**

சங்க காலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சில பழக்கவழக்கங்களைத் திருவள்ளுவர் ஒதுக்குகின்றார். மேலும் அறன் வலியுறுத்தல், அன்புடைமை, விருந்தோம்புதல், இனியவை கூறல், செய்நன்றி அறிதல், நடுவுநிலைமை, அடக்கமுடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் விழையாமை, பொறையுடைமை, புறம் கூறாமை, கொல்லாமை, கள்ளுண்ணாமை, புலால் மறுத்தல், கல்லாமை, வெகுளாமை, இன்னா செய்யாமை போன்ற அதிகாரங்களில் சமுதாயத்திற்குத் தேவையான அறக்கருத்துக்களைத் திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

உலக மொழிகளில் தொன்மையான மொழியாக விளங்குவது தமிழ்மொழி. அம்மொழியால் உயர்ந்த தமிழினம் தன்னிகரில்லா ஒரு தனியிடம் பெற்றுள்ளது. அத்தமிழினம் தனக்கெனத் தனித்த நாகரீகத்தையும், பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் கொண்டுள்ளதால் தான் புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் " திங்களொடும் செழும்பரிதி தன்னோடும்; விண்ணோடும் உடுக்களோடும்; மங்கு கடல் இவற்றோடும் பிறந்த தமிழுடன் பிறந்தோம் நாங்கள் " என்று சிறப்பித்துள்ளார்.

**அறம் வரையறை:-**

மானிடப் பிறவியாகிய மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க நெறிமுறைத் தொகுதியின் முழுநிறை வடிவமே அறமென்று கூறுவர். மனிதப் பிறவியில் பற்றிக்கொண்டு தொடர்ந்து வரும் தீவினையை அறுத்தெறிவதே அறமாகும். எண்ணம் தூய்மையாக இருந்தால் தான் சொல்லும், செயலும் தூய்மையாக அமையும். எண்ணம் எழுவதற்கு அடிப்படையான மனம் மாசில்லாததாக இருக்க வேண்டும். இதனை,

" மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற." (குறள். 34)

என்ற திருக்குறளின் வழியே மனத்தின் மாசினைப் போக்குவதற்கு முயலுவதே அறம் என்கிறார். மேலும் திருவள்ளுவர் பொறாமை, பேராசை, கோபம், கடுஞ்சொல் ஆகியவை மன மாசுகளாக கருதலாகிறது. இந்த நான்கும் இல்லாமல் இருப்பதையும், ஒருவன் மனதளவில் குற்றம் இல்லாதவனாக இருப்பதையும் அறம் என்கிறார். இதனை,

" அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம். " (குறள். 35)

என்ற குறட்பாவில் மனத் தூய்மையில்லாத தீய எண்ணமும், உண்மையை மறைத்துச் சொல்லப்படும் சொல்லும், செய்யப்படும் செயலும் அறமாகாதென திருவள்ளுவப் பெருந்தகை வரையறை தருகிறார்.

அறம் என்பது இவ்வுலகில் வாழும் உயிர்களுக்கு உணவும், உடையும், உறையுளும் கொடுப்பதே சிறந்த அறம் என்று மணிமேகலைக் குறிப்பிடுகிறது. இதனை,

" அறமெனப்படுவது யாதெனக் கேட்பின்
மறவாது இதுகேள்
மன்னுயிர்க் கெல்லாம் உண்டியும் உடையும்
உறையுளும் அல்லது கண்டது இல் "

என்ற மணிமேகலை பாடல் அடிகள் வழி அறிய முடிகிறது.

அறம் என்பது தன் ஒழுக்க நெறியில் இருந்து சிறிதும் தவறாது இருத்தலே அறமாகும். அறம் என்ற சொல்லுக்கு தர்மம், கடமை, தியானம், புண்ணியம், ஞானம், நல்வினை, தருமதேவதை, அறக்கடவுள், அறச்சாலை, நோன்பு என்ற பொருளைத் தருகின்றது.

" முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம். " (குறள். 93)

முகம் மலர்ந்து மனத்தில் எழும் அன்பு உணர்ச்சியுடன் இனிய சொற்களைப் பேசுவதே அறமாகும். புத்தர், வள்ளலார், விவேகானந்தர், அன்னை தெரசா ஆகிய தியாக சீலர்கள் திருக்குறள் நெறிப்படி வாழ்ந்திருப்பதை நம்மால் உணர்ந்துகொள்ள முடிகிறது. அதுபோலவே நாமும் திருக்குறள் நெறியை பின்பற்றி வாழ முயற்சித்தால் " நம் எண்ணங்கள் நிறைவேறும் '' சாதனையும் நிகழும்.

அறம் என்ற சொல்லை இரண்டாக பிரிக்கலாம். அவை தனிமனித அறம், சமூக அறம் என்பதாகும். அறம் என்பது விருந்தோம்பல், கொடை, மற்றவர்க்கு உதவுதல், பிறருக்கு ஊறு விளைவிக்காமல் இருத்தல் போன்ற பல்வேறு செயல்பாடுகளை கூறலாம். சமுதாயத்தை முன்னிறுத்தும் வகையில் அமைந்துள்ள அற செயல்பாடுகள் அனைத்தும் சமூக அறம் எனலாம்.

**அன்பறம்:-**

அறங்களில் மிகவும் மென்மையும், வலிமையும் கொண்ட அறம் எதுவென்றால் பிற உயிர்களிடத்தில் நாம் கொண்டுள்ள அன்பெனும் அறமாகும். அன்பு என்னும் அறவலிமை மிகவும் சிறந்ததாகும். எலும்பு இல்லாத உயிரினமான புழுக்களை வெயிலில் காயவைத்து துடிதுடிக்கச் செய்வதுபோல அன்பில்லாத மனிதர்களை அறக்கடவுள் துன்பங்களைத் தந்து வருந்தச் செய்யும் என்பதை,

" என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். " (குறள். 77)

என்ற திருக்குறள் வழியே அறிய முடிகிறது. மேலும் அன்பு வழியில் நடக்கும் உடம்பே உயிருள்ள உடம்பு என்பதையும், அன்பில்லாதவர் உடம்பு எலும்பைத் தோலால் போர்த்து மூடிக்கட்டிய வெற்றுடம்பே ஆகும் என்கிறார்.

அன்பு உள்ள உயிர்களில் இறைவன் அன்பு வடிவில் செயல்படுகிறான். இதனை,

" அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு." (குறள். 80)

என்கிறார் திருவள்ளுவர்.

மனித சமுதாயம் மேம்பட வேண்டுமானால் அவனிடம் உள்ள தீய குணங்கள் நீங்கி அனைவரிடமும் அன்புகாட்ட வேண்டும். அன்பு வழியைப் பின்பற்றினால் வாழ்வில் வெற்றியடைய முடியும். அன்பு பொறுமையுள்ளது, நன்மைசெய்யும், பொறாமைப்படாது, தற்புகழ்ச்சிக் கொள்ளாது, தன்னலம் நாடாது, அனைத்தையும் பொறுத்துக்கொள்ளும், அன்பே தலை சிறந்தது என்று விவிலியம் எடுத்தியம்புகிறது.

" அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு. " (குறள். 73)

அன்பின் வழிக்கொண்டே இவ்வுலகில் அனைத்து இயக்கங்களும் நடைபெறுகின்றன. அன்புநெறியே அனைத்திற்கும் ஆதாரம் என்பதை உணர்த்த விரும்பிய அருள் நெறியாளர் திருவள்ளுவர், மனித உடம்பில் உயிர்வந்து பொருந்துவதற்கு உறுதுணையாக இருப்பது அன்பு தான். உலகில் வளமுற வாழ்ந்து வர உறுதுணையாக இருப்பது அன்பேயாகும், அன்பு இல்லையேல் வாழ்வில் தோற்றமும் இல்லை, வளர்ச்சியும் இல்லை, அன்பினால் தோன்றும் இன்பமும் இல்லை என்கிறார் திருவள்ளுவர்.

அன்பு உள்ள உயிர்களில் இறைவன் அன்பு வடிவில் செயல்படுகிறான். “ வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் " என்கிறார் வள்ளலார். திருவள்ளுவரின் கருத்துக்கேற்ப திருஅருட்பிரகாச வள்ளலார் நன்மையும், தீமையையும் பகுத்துணரக்கூடிய மனிதர்கள் தம் இனத்தார் படும் துயரங்களையும், விலங்கு, பறவை முதலிய அஃறிணை உயிர்கள் படும் துன்பத்தையும் கண்டு அத்துன்பங்களை நீக்குவதற்குரிய அருள் முயற்சியாகிய இரக்க உணர்வினைப் பெறுதல் வேண்டுமென்பது வள்ளலாரின் உயிர் இரக்கமாகிய குறிக்கோளாகும்.

நமக்கு மழையை உதவுகின்ற மேகத்துக்கு உலகத்தார் என்ன கைம்மாறு செய்கின்றனர்? மேகத்தைப் போன்றோர் செய்யும் உதவிகளும் கைம்மாறு வேண்டாதவை என்கிறார் திருவள்ளுவர்.

“ கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு. " (குறள். 211)

என்பதற்கு ஏற்ப உயிர் தொண்டின் இலக்கணம் என்று கொண்டு தொண்டு செய்து உயர்ந்தார் அடிகளார். பசிப்பிணி நீக்க சத்திய தர்மசாலை நிறுவியவர். மனைவி, மக்கள், நண்பர்களிடம் காட்டும் பரிவு, பாசம் என்றும், அன்பு என்பது அது சிந்தனை கடந்து என்றும் நன்மை, தீமை என்ற வினை நோக்காது என்றும், கருணை வயப்பட்ட செயலாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார். "தொண்டு பிறவிக்கு " ஔவை " அறம் செய விரும்பு, ஊக்கமது கைவிடேல் " என்றார். கருணை புகழ் அன்னை தெரசா அவர்கள் பேரறிவும், பேரழகும் இல்லாதவர்களாக இருப்பினும் அவரது அன்பு நெறியால் நோபல்பரிசு பெறுவதற்கு உரிய சான்றினைப்பதித்தது அன்பு நெறி தான். அவருடைய சமுதாயத் தொண்டு, பழகும் நெறி, பொதுநலப் பணிகள் இவற்றில் எல்லாம் இவர் இறந்த பின்பும் வாழ்வாங்கு வாழ்கிறார். இதனை திருவள்ளுவர்,

" ஒன்றா உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்று இல். " (குறள். 233)

இவ்வுலகில் அழியாமல் நிற்பது உயர்ந்த புகழைத் தவிர வேறொன்றும் இல்லை என்கிறார் திருவள்ளுவர். இவ்வுலகில் புகழை விரும்பாதவர் யாரும் இல்லை. வாழ்க்கையில் பழி உண்டாகாமல் வாழ்கின்றவரே உயிர் வாழ்கின்றவராவர், புகழ் உண்டாகாமல் வாழ்கின்றவர் உயிர் வாழாதவராவர்.

**ஈதலறம்:-**

ஔவையார் " அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது " (தனிப்பாடல் திரட்டு: 58) என்கிறார். அவ்வரிய மனிதப் பிறவியெடுத்தவர் பண்புகளில் சிறந்து விளங்க வேண்டும். அம்மனிதப் பண்புகளில் சிறந்த ஒன்றாகக் கருதப்படுவது ஈகையெனும் ஈதலறமாகும். தன்னை நாடி வருபவர்களுக்கு இல்லை எனக் கூறாமல், இருப்பதைக் கொடுத்துதவுவதே மிகச்சிறந்த ஈதலறமாகும்.

ஈகை என்பதை " உயிரின் ஊதியம் ஈகை " என்பர். வறியவரின் கடும்பசியைப் போக்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைப் பின்பு தனக்கு உதவ வேண்டிச் சேர்த்து வைக்கும் இடமாகும் என்கிறார் திருவள்ளுவர். அதனை,

" அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. " (குறள். 226)

" வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. " (குறள். 221)

ஒன்றும் இல்லாதவருக்கு ஒரு பொருளைக் கொடுப்பது ஈகை ஆகும். மற்றவர்க்குக் கொடுப்பதெல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதாகும். எனவே பயன்கருதாது, எதனையும் எதிர்பார்க்காது உதவி செய்வதே தலையாய மனித வளர்ச்சியாகும்.

நடுவூருள் வேதிகை சுற்றுக் கோள்புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங்
கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை. (நாலடி. 96)

ஈகைக் குணம் உடையவர் ஊரின் நடுவே பலரும் அணுகிப் பயன் பெற முடியும் மரம் போன்று பலருக்கும் பயன் தருபவர். ஊர் நடுவே இருப்பதால் பெண்பனையைப் போன்றவர். ஈயாதவர் சுடுகாட்டில் உள்ள ஆண்பனையைப் போன்று பயன் தராதவர். மேலும் அணுக இயலாத இடம் என்று பனை மரங்களின் இயல்புகளை மக்களின் பண்புக்கு உவமையாக்கும் நயம் சிறப்பிற்குரியதாகும். எனவே செல்வத்தின் பயன் ஈதலாகும்.

" நல்லாறு எனினும் கொளல்தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று. " (குறள். 222)

பிறரிடமிருந்து பொருள் பெறுதல் அறநெறி என்றாலும், கொள்ளுதல் தீமையானது; மேலுலகம் இல்லையென்றாலும் பிறருக்குக் கொடுப்பதே நல்லது என்கிறார் திருவள்ளுவர். மேலும் பசித்தவர்க்குக் கொடுத்தல், பசி என வந்தோர்க்குப் புசி எனத்தருதல், ஏதுமற்ற ஏழைகளின் மிக்க பசித் துன்பத்தைப் போக்குதல் ஆகியன மிகச்சிறந்த அறமாகும்.

பிறருக்கு உதவுகின்ற ஈகை குணம் வாய்க்கப் பெற்றவனிடம் உள்ள செல்வமானது அவ்வூரிலுள்ள அனைவருக்கும் பயன்படும் என்பதை,

" பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்." (குறள். 216)

என்ற குறட்பாவின் மூலம் ஊரின் நடுவே அமைந்துள்ள பழுத்த மரமானது அனைவருக்கும் பயனளிக்கும் என்பதை அறிய முடிகிறது.

**இல்வாழ்க்கை அறம்:-**

இல்வாழ்க்கை என்பது ஒரு தனிமனித அறமாகும். இல்வாழ்க்கையை அறவழியில் நடத்த வேண்டும். இல்லறம், துறவறம் ஆகிய இருவகை அறங்களுள் மிகச் சிறப்பித்துச் சொல்லப்படுவது இல்லறம் ஆகும். அதாவது வாழ்க்கையாகிய இல்லறத்தில் குற்றமற்ற இல்வாழ்க்கை என்பது தவ வாழ்க்கையை விட மேலானதாகும். இதனை,

" அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று. " (குறள். 49)

என்ற குறளடிகளால் தெளியமுடிகிறது. மேலும் அன்பும் அறனும் பொருந்திய நன்முறையிலான வாழ்க்கையினை வாழவேண்டும் என்கிறார். மேலும் எல்லாரிடத்தும் உண்மையான அன்பும், அறநெறியில் செய்ய வேண்டிய கடமையும் அமையுமானால் அவையே இல்வாழ்க்கையின் பண்பாகவும், பயனாகவும் அமையும் என்பதை,

" அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. " (குறள். 45)

என்ற குறளின் மூலம் அறிய முடிகிறது. மேலும் இல்வாழ்க்கையில் குடும்ப வாழ்க்கை நடத்துகின்றவன் தனது தாய், தந்தை, மனைவி ஆகிய மூவருக்கும் நல்வழியில் உதவியாக இருக்க வேண்டும் என்பதை,

" இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை." (குறள். 41)

என்ற குறள் வழியே திருவள்ளுவர் இல்வாழ்க்கை அறத்தின் மேன்மையைச் சுட்டியுள்ளதைக் காணமுடிகிறது. மேலும் ஐம்புலன்களை அடக்கித் தியானம், நோன்பு ஆகிய நெறிகளில் நின்று தவம் செய்பவர்களைவிட அறநெறியில் நின்று இல்வாழ்க்கையை நடத்துபவன் உயர்ந்தவன் ஆவான். இதனை,

" இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை. " (குறள். 47)

என்ற வள்ளுவரின் வாக்கினால் அறிய முடிகிறது. அதாவது இல்வாழ்க்கையில் கணவன், மனைவி இருவரும் சேர்ந்து பிறரிடத்தில் காட்டும் அன்பானது அறத்தோடு பொருந்தியதாக அமைய வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுகிறார்.

**விருந்தோம்பல் அறம்:-**

தனக்கு முன்பின் அறியாதவர், உற்றார், உறவினர் அல்லாதவர் பசியால் தம் இல்லம் நோக்கி வருபவர்க்கு விருந்து படைப்பது அறமான செயலாகும். இதனை,

" செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. " (குறள். 86)

என்னும் இந்தக் குறளின் வழி அறிய முடிகின்றது. மேலும் இக்குறளில் வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு விருந்து படைத்து வைத்து அனுப்பிவிட்டு, இன்னும் விருந்தினரை எதிர்ப்பார்த்திருக்கின்ற விருந்தோம்பும் அறச்செயலை இக்குறளில் காணமுடிகின்றது.

இல்வாழ்க்கை என்பது கணவன், மனைவி கூடிவாழும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்க்கையாகும். அத்தகைய இல்லறம் சிறந்த நல்லறமாகச் சிறக்க அவசியமாவது விருந்தோம்பல் அறமாகும். இல்வாழ்க்கையை அறத்தோடு நடத்தும் இல்லாள்தான் வீட்டிற்கும் வரும் விருந்தினரைச் சரியான முறையில் உபசரிக்க முடியும்.

நம் வீட்டிற்கு வரும் விருந்தினரை நன்கு உபசரித்தபின் உண்பவளே நல் இல்லறத்தாள். வீட்டிற்கு வரும் விருந்தினரை முகம் மலர்ச்சியுடன் வரவேற்றுப் பேணுபவள் வீட்டிற்குள் திருமகளாகிய இலக்குமி மன மகிழ்ச்சியோடு குடிகொண்டு வீற்றிருப்பாள். இதனை,

" அகனமர்ந்து செய்யான் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல். " (குறள். 84)

என்ற குறட்பாவினால் அறிய முடிகிறது. மேலும் தன் இல்லத்திற்கு வருகை தந்த விருந்தினரை முகமலர்ச்சியோடு உபசரித்துவிட்டு மனமகிழ்ச்சியோடு அவர்களை வழியனுப்பி விட்டு இனிவர இருக்கின்ற விருந்தினரை எதிர்பார்த்து காத்திருப்பவர் வானுலகத்தில் வாழ்கின்ற தேவர்களுக்கு இணையானவர்கள் என திருக்குறளின் மூலம் அறிய முடிகிறது.

விருந்தோம்பல் சங்க காலத்தில் பெரிதும் போற்றப்பட்ட பேரறமாக விளங்கியது. எந்நாட்டவராயினும், எம்மொழியினராயினும் நட்புக் கொள்ளும் நல்லெண்ணத்துடன் வீடு தேடி வருவார்களாயின் அவர்களை வரவேற்று புதியவராக கொண்டனர். தொல்காப்பியர் இதனை,

" விருந்தே தானும் புகுவது கிளந்த யாப்பின் மேற்றே "

என்ற நூற்பாவால் குறிப்பிடுகிறார். மேலும் அக்கால மக்கள் விருந்தோம்பலைக் கடமையாக கொண்டனர் என்பதை,

" விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன "

என்ற நூற்பா அடிகள் குறிப்பிடுகின்றன.

' விருந்தினரைப் புறம் தருதல் ' என்று பரிமேலழகரும், ' உண்ணும் காலத்துப் புதியார் வந்தால் பகுத்துண்ண வேண்டும் ' என்று மணக்குடவரும் தம் புதல்வரிடத்து வைக்கும் அன்பைப் போலப் பிறரிடத்தும் அன்பு வைத்து ஓம்பல் என்று பரிதியும் விளக்குவர். க.ப அறவாணன் தமது நூலொன்றில், புதியவராய் வருவர்க்கு உணவளித்து உபசரித்தல் எனும் கோட்பாடு அக்காலத்து எங்கோ சில இடங்களில் சத்திரம் சாவடிகள் இருந்தன ஊர் விட்டு வேறு ஊர்ப் பயணம் மேற்கொள்ளுவோர் கால் நடையாகவும், சிறு வண்டியிலும் பயணம் மேற்கொண்டனர். நாள்தோறும் வேளை தோறும் பசித்தோர்க்கு உணவு அளித்தலே விருந்தோம்பலின் நோக்கமாக அக்காலத்துக் கருத்து வளர்த்தெடுக்கப்பட்டிருத்தல் வேண்டும் என ஈகைக் கோட்பாடு வளர்க்கப்பெற்றது போல விருந்தோம்பல் கோட்பாடும் வளர்க்கப்பெற்றது போலும். சங்க இலக்கிய ஆற்றுப்படை இலக்கியங்களும் அரசனைக் காணச்

செல்லும் பாணர், முதலானோர்க்கும், இன்ன பிறருக்கும் அறிமுகம் இல்லாமலே உணவு அளித்து உபசரித்தலும் இப்பின்னணியிலேயே ஊக்கப்படுத்தப் பெற்றிருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.

திருவள்ளுவர் விருந்தோம்பல் என்ற அதிகாரத்தைப் படைத்துள்ளார். விருந்தினரைப் பேணி அவர்க்கு உபகாரம் செய்தலே இல்வாழ்க்கையின் நோக்கம்

" இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. " (குறள். 81)

என்றும் விருந்தினன் ஒருவன் இல்லின் புறத்ததாக அமையத் தான் ஒரு பொருளை விரும்புதல் சாவா மருந்தெனினும் வேண்டாம் என்பதை,

" விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று. " (குறள். 82)

என்றும் விருந்தோம்பலின் மேன்மையை உரைக்கிறார்.

மேலும் விருந்தோம்பலால் பெறும் பயன்களாக விருந்தோம்புபவனுக்கு நல்குரவு இல்லை தன்னை நாடி வரும் விருந்தினரை நாள்தோறும் உபசரிப்பவனுடைய வாழ்க்கை வருந்திக் கெடுவதில்லை என்பதை,

" வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்த பாழ்படுதல் இன்று. " (குறள்.83)

மேலும் விருந்தினரை உபசரித்து அதன் பயனை அடையாதவர் தம் பொருளை வருந்திக் காத்து (பின் இழந்து) ஆதரவு அற்றவர்களானோம் என இரங்குவர் என்பதை,

" பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார். " (குறள். 88)

என்று திருவள்ளுவர் மொழிகின்றார்.

விருந்தோம்பலின் இன்றியமையாப் பண்பு முகம் திரியாமை என்பதை,

" மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து. " (குறள். 90)

என்ற குறள்களில் கூறி இன்முகம் காட்டுதலின் சிறப்பை எடுத்துரைக்கிறார். நாலடியார் விருந்தோம்பலுக்கென்று தனி அதிகாரம் ஒதுக்கப்படவில்லை. ஆனால் சுற்றந் தழால் (பா.10) நட்பு ஆராய்தல் (பா.7) தாளாண்மை (பா.3) போன்ற அதிகாரங்கள் விருந்தோம்பல் செய்தியை வலியுறுத்துகின்றன. இங்கு விருந்து பகைவரிடமிருந்து கிடைக்குமாயின் வேண்டாம் எனவும், சுற்றத்தாரிடமிருந்து பெறும் உணவு கூழ் போன்று இருந்தாலும் உண்ணுதற்கினியது எனவும் கூறப்படுகின்றன. பகைவரிடமிருந்து பெறும் உணவு வேம்புக்கு நிகராகும் (206, 207, 210) எனவே விருந்து பகைவரிடமிருந்து பெறலாகாது என்பது இங்கு சுட்டப்படுகின்றன. மேலும் நட்பு ஆராய்தலின் ஏழாம் பாடல் உணவின் சுவை உணவுக்கு உள்ளே இருப்பதைக் காட்டிலும் உணவை வழங்குவோர் உள்ளத்தின் உள்ளே இருக்கிறது என்பதை கூறுகிறது.

**முடிவுரை:-**

உலக பொதுமறை நூலாக விளங்கும் திருக்குறள் தமிழர்களின் வாழ்வில் அறங்களையும் இல்லற ஒழுக்கத்தையும், நீதி கருத்துகளையும் மேலும் தனிமனித ஒழுக்கம், சமுதாய வளர்ச்சி, பொதுநலம் போன்ற வாழ்க்கையின் அறநெறிகள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டிருக்கிறது. பொருளீட்டும் பொது வாழ்விற்கும், இல்லற வாழ்வியலாகிய தனிமனித வாழ்விற்கும் அடிப்படையாக அமைவது அறமாகும்.

அவ்வகையில் திருவள்ளுவர் படைத்த திருக்குறளில் பல கோணங்களில் வகுத்துக்காட்டியுள்ள பன்முக அறங்களை கடைப்பிடித்தொழுகி, தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்த்து நலமார்ந்த நற்சிந்தனைகளை மனதில் கொண்டு தமிழுலகிற்கும், உலக அமைதிக்கும் துணை நிற்பதும், அதனை இன்றைய தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதும் நம் அனைவரின் தலையாயக் கடமையாகும்.

**துணைநூற்பட்டியல்:-**

1. திருக்குறள் தெளிவான உரை, உரையாசிரியர் புலவர் செந்துறைமுத்து, கங்கை புத்தக நிலையம், முதற்பதிப்பு: பிப்ரவரி, 1993, அச்சிட்டோர் ராகவேந்திரா ஏஜென்சீஸ், சென்னை - 600005.

2. திருக்குறள் தமிழ் மரபுரை, மொழிஞாயிறு பேராசிரியர் ஞா. தேவநேயப் பாவாணர், ஸ்ரீ இந்து பப்ளிகேஷன், சென்னை - 600 017, முதற்பதிப்பு - டிசம்பர்- 2000.

3. தெய்வப் புலவர் அருளிய திருக்குறள் - உரை விளக்கம், உரையாசிரியர் ஜெ. ஸ்ரீசந்திரன், வாத்தமான் பதிப்பகம், சென்னை - 600 017, முதற்பதிப்பு - டிசம்பர் 2000.

4. திருக்குறள் பாத்திரள், செங்குட்டுவன் கொடியோ கிராபிக்ஸ், சென்னை - 600 033, முதல் பதிப்பு 2001.

5. புரட்சிக்கவி பாவேந்தர் பாரதிதாசன் கவிதைகள், இந்து பப்ளிகேஷன்ஸ், தி. நகர், சென்னை - 600 017, ஏழாம் பதிப்பு, செப்டம்பர் 2006.

6. திருக்குறள் அதிகார விளக்கம், கலைமாமணி திருக்குறளார் வீ. முனிசாமி, வானதி பதிப்பகம் சென்னை - 600 017, இரண்டாம் பதிப்பு சூன் 2008.

7. திருக்குறள் சமுதாயவியல் ஆய்வுத் தெளிவுகள் அருள்திரு திருக்குறள் தூயர் பேராசிரியர் முனைவர் கு. மோகனராசு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 600 108, முதல் பதிப்பு - திருவள்ளுவராண்டு 2047 (சூன் - 2016).

8. திருக்குறள் மக்கள் உரை, அருள்திரு திருக்குறள் தூயர் முனைவர் கு. மோகனராசு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 600 081, 22 - வது பதிப்பு, சூன் 2018.

**References:**

1. Thirukkural Thelivana Urai (Thirukkural Clear Commentary), Commentator: Pulavar Senchuraimuthu, Gangai Puththaka Nilayam, First Edition: February, 1993, Printed by: Raghavendra Agencies, Chennai - 600005.

2. Thirukkural Thamizh Maraburai (Thirukkural Tamil Traditional Commentary), Author: Mozhinayiru Professor Gna. Devaneyap Paavaanar, Sri Indu Publication, Chennai - 600 017, First Edition - December - 2000.

3. Theiva Pulavar Aruliya Thirukkural - Urai Vilakkam (Thirukkural Penned by Divine Poet - Commentary Explanation), Commentator: J. Srichandran, Vaaththaman Pathippagam, Chennai - 600 017, First Edition - December 2000.

4. Thirukkural Paaththiral (Thirukkural Anthology), Sengkuttuvan, Kodiyo Graphics, Chennai - 600 033, First Edition 2001.

5. Puratchik Kavi Paavendar Bharathidasan Kavithaigal (Revolutionary Poet Pavendar Bharathidasan's Poems), Indu Publications, T. Nagar, Chennai - 600 017, Seventh Edition, September 2006.

6. Thirukkural Athikara Vilakkam (Thirukkural Chapter Explanation), Kalaimamani Thirukuralar V. Munusamy, Vanathi Pathippagam, Chennai - 600 017, Second Edition June 2008.

7. Thirukkural Samuthayaviyal Aayvu Thelivugal (Thirukkural Sociological Research Insights), Reverend Thirukkural Thuyar Professor Dr. K. Mohanaraju, Manivasagar Pathippagam, Chennai - 600 108, First Edition - Thiruvalluvar Year 2047 (June - 2016).

8. Thirukkural Makkal Urai (Thirukkural People's Commentary), Reverend Thirukkural Thuyar Dr. K. Mohanaraju, Manivasagar Pathippagam, Chennai - 600 081, 22nd Edition, June 2018.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.